1978 மார்ச் 2]

விஸ்தரிப்புத் திட்டத்தை எதிர்த்து ஹைக்கோர்ட்டிலே வழக்கு தொடரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, இது உண்மையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியே இதற்குத் தூண்டுதலாக அமைந்துவிடக் கூடாது. அப்படி எதுவும் இல்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : பல்லடம் பகுதிக்கு விஸ்தரிக்கப்படயிருக்கும் இந்தத் திட்டம் திருப்பூர் சூலூர் பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதன் மூலம் பயன் பெறும் தாலுக்காக்கள் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம், தாராபுரம் ஆகியவையாகும்.

* 345 வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட வாய்க்கால் மூலம் செட்டிபாளையம் (மதுக்கரை ஒன்றியம்) குட்டைக்கு நீர் விடும் திட்டம் கைவிடப்பட்டதற்கான காரணம் யாது ?

(ஆ) மீண்டும் அதனைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் ஆயக்கட்டு பகுதிக்கே போதிய தண்ணீர் இன்மையாலும், இத்திட்டம் நிறைவேற்றப்பட அதிகப்படியான தொகை செலவு செய்யப்பட வேண்டியுள்ளது என்ற காரணம் கருதியும் கைவிடப்பட்டது.

(ஆ) இல்லை.

திரு. கு. ரமணி : பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் போதிய அளவு தண்ணீர் இல்லை என்ற விடையை அமைச்சரவர்கள் தந்தார்கள். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் எவ்வளவு தண்ணீர் நமக்கு மொத்தமாகக் கிடைக்கும் என்பதற்கு கேரள-தமிழக அரசுகளிடையே பேச்சுவார்த்தை இறுதிப்படுத்தப்பட்டு முடிவு ஆகி உள்ளதா ? இன்னும் தண்ணீர் கிடைப்பதற்கு பாத்தியதை உண்டா ? அப்படியானால் எப்போது கிடைக்கும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேரள அரசுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தியதில் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆறுகளின் மீது மீண்டும் பேசுவதற்குத் தயாராக இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அதனால்தான் நான் முதல் கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே சொன்னேன். 32 டி.எம்.சி. கிடைக்கும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் 23 டி.எம்.சி. தான் இப்போது கிடைக்கும் நிலை இருக்கிறது.

[முற்பகல் 9-20]

திரு. து. ராமசாமி : பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம் பெருந்தலைவர் காமராஜர் காலத்திலிருந்து இன்றுவரை அதை விஸ்தரிப்பதற்கு பல நிலைகளில் முடிவு எடுக்கப்பட்டு இடையில் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று பல கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம். ஆகவே இந்தத் திட்டத்தை தாராபுரம் தாலுகாவிற்கு விஸ்தரித்துக் கொடுத்து, எவ்வளவு ஏக்கர்கள் தாராபுரம் விஸ்தரிப்பில் எடுத்துக்கொள்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விஸ்தரிப்பு மேற்கொள்ளப்பட இருக்கிறது. தாராபுரத்தில் 38,150 ஏக்கர் பலன்பெறும்.

மின்வாரிய தலைமைப் பொறியாளர்கள்.

* 346 வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மின்சார வாரியத்தில் உள்ள தலைமை என்ஜினியர்களின் மொத்த எண்ணிக்கை என்ன ?

(ஆ) தலைமை என்ஜினியர்களின் தலைமை அலுவலகம் எங்கே உள்ளது ?

(இ) தலைமை அலுவலகங்கள் ஒரே இடத்தில் இருப்பதை மாற்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆறு.

(ஆ) ஒன்று கோவையில் உள்ளது மற்றவை சென்னையில் உள்ளன.